குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மணப்பாறை.

**முன்னிலை : திரு. கே.செந்தில் குமார், பி.ஏ., பி.எல்.,**
குற்றவியல் நீதித்துறை நடுவர், மணப்பாறை.

2020-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 10-ஆம் நாள்

**சுருக்கு முறை வழக்கு எண். 1/2018**

<u>வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்</u> : 30.01.2018
<u>வழக்கு விசாரணை முடிவுற்ற நாள்</u> :02.01.2020

அரசுக்காக, காவல் ஆய்வாளர்,
வளநாடு காவல் நிலைய கு.எண். 138/17 - குற்றமுறையீட்டாளர்

- எதிராக-

1. மணிமேகலை, க/பெ. அழகர்சாமி
2. அழகர்சாமி, த/பெ. ஆறுமுகம்
3.பழனிச்சாமி, த/பெ. குழந்தை - எதிரிகள்

இவ்வழக்கானது என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் கற்றறிந்த குற்றவியல் வழக்குரைஞர் நிலை 2 ***திருமதி. விஜயாமணி, பி.ஏ., பி,எல்.,*** அவர்களும் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் ***திரு.பி.பால்ராஜ் , எம்.ஏ., பி.எல்.,*** அவர்களும் ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**<u>தீ ர் ப் பு ரை</u>**

இவ்வழக்கானது புகார்தாரரால் குற்றவியல் விசாரணை முறைச் சட்டப் பிரிவு 173(2)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின்படி எழுந்த வழக்காகும்.

## <u>2. அரசு தரப்பு வழக்கு:-</u>

23.09.2017-ம் தேதி 20.00 மணிக்கு பாலத்துப்பட்டி கிராமத்தில் புகார்தார்/பிச்சையம்மாள் என்பவர் மாடுகளை மேய்த்துவிட்டு பட்டியில் அடைத்துவிட்டு ஊரில் உள்ள பொதுபைப்பிற்கு சென்று தண்ணீர் பிடித்து கொண்டிருந்தபோது அதே தெருவைச் சேர்ந்த மணிமேகலை (1-ம் எதிரி) என்பவரும், அவரது கணவர் 2-ம் எதிரி அழகர்சாமி என்பவரும் அங்கு வந்து புகார்தாரரை கையை பிடித்து தெருவில் இழுத்து போட்டு கையால் அடித்து காலால் மிதித்தும், அங்கு வந்த உறவினர் 3-வது எதிரி பழனிச்சாமி குச்சியால் புகார்தாரரை முதுகிலும், இடுப்பிலும்

அடித்து காயத்தை ஏற்படுத்தியும், ஆபாச வார்த்தைகளால் திட்டியும் ஆக 1 முதல் 3 எதிரிகள் இதச பிரிவுகள் 294(பி), 323-ன் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார்கள் என்பது அரசு தரப்பு வழக்கு.

## 3. வழக்கு கோப்புக்கு எடுத்து எதிரியிடம் வினவல்.-

எதிரிகளின் குற்றச்செய்கைகள் பரிசீலிக்கப்பட்டு வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டது. எதிரிகள் முன்னிலையான பின்னர் அவருக்கு வழக்காவணங்களின் நகல்கள் குற்றவியல் விசாரணைமுறை சட்டப்பிரிவு 207-ன்படி இலவசமாக வழங்கப்பட்டு போதிய கால அவகாசத்திற்கு பின்னர் எதிரிகளிடம் இறுதி அறிக்கையின் சாராம்சம் குறித்து விளக்கி வினவிய போது எதிரிகள் குற்றத்தை மறுத்தனர். பொய் வழக்கு என்று கூறினர். அதனால் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

## 4. விசாரணை:-

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

## 5. அரசு தரப்பு சாட்சியம் :-

அ) புகார்தாரர்/அ.சா.1 குற்ற நிகழ்வு குறித்தும், அது குறித்து காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

ஆ) குற்ற நிகழ்வை நேரில் கண்ணுற்றதாக அ.சா.3, அ.சா.4, மற்றும் அ.சா.6 ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளனர்.

இ) குற்ற நிகழ்விடம் குறித்து நீருபணம் செய்வதற்கு பார்வை மகசர் சாட்சி/ அ.சா.5 சாட்சியம் அளித்துள்ளார்.

ஈ) அ.சா.1 அவர்களுக்கு சிகிச்சை அளித்தது குறித்தும், ஏற்பட்ட காயங்களின் தன்மை அறிந்து கருத்துரை வழங்கியது குறித்து அரசு மருத்துவர்/அ.சா.7 சாட்சியம் அளித்துள்ளார்

உ) குற்ற நிகழ்வு குறித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதற்கட்ட விசாரணை மேற்கொண்ட உதவி ஆய்வாளர்/அ.சா.8 அவர்களும், இறுதிகட்ட விசாரணை மேற்கொண்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் உதவி ஆய்வாளர்/அ.சா.9 அவர்களும் சாட்சியம் அளித்துள்ளனர்.

## 6. கு.வி.மு.ச. பிரிவு 313-ன்படியான நடவடிக்கை:-

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றிய விஷயங்கள் குறித்து கு.வி.மு.ச. 313(1) (ஆ) பிரிவின் படி கேள்விகள் கேட்க எதிரிகள் தரப்பில் சாட்சியங்களை பொய் என மறுத்தனர். எதிரிகள் தரப்பில் எவ்வித சாட்சியமும் முன்வைக்கப்படவில்லை.

**7. பிரச்சினை:-**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் அரசு தரப்பில் எதிரி மீதான குற்றத்தை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளதா? என்பதாகும்.

**8. தீர்வு:-**

**அ)** 23.09.2017-ம் தேதி 20.00 மணிக்கு பாலத்துப்பட்டி கிராமத்தில் புகார்தார்/பிச்சையம்மாள் என்பவர் மாடுகளை மேய்த்துவிட்டு பட்டியில் அடைத்துவிட்டு ஊரில் உள்ள பொதுபைப்பிற்கு சென்று தண்ணீர் பிடித்து கொண்டிருந்தபோது அதே தெருவைச் சேர்ந்த மணிமேகலை (1-ம் எதிரி) என்பவரும், அவரது கணவர் 2-ம் எதிரி அழகர்சாமி என்பவரும் அங்கு வந்து புகார்தாரரை கையை பிடித்து தெருவில் இழுத்து போட்டு கையால் அடித்து காலால் மிதித்தும், அங்கு வந்த உறவினர் 3-வது எதிரி பழனிச்சாமி குச்சியால் புகார்தாரரை முதுகிலும், இடுப்பிலும் அடித்து காயத்தை ஏற்படுத்தியும், ஆபாச வார்த்தைகளால் திட்டியும் ஆக 1 முதல் 3 எதிரிகள் இதச பிரிவுகள் 294(பி), 323-ன் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார்கள் என்பது அரசு தரப்பு வழக்கு.

**ஆ) புகார்:-**

i) குற்ற நிகழ்வானது கடந்த 23.09.2017 அன்று இரவு 8.30மணியளவில் ஊர் பொதுபைப்புக்கு அருகே நடைபெற்றதாக புகார்தாரர் தனது புகார் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

ii) முதல் தகவல் அறிக்கையானது "27.09.2017 அன்று 10.30மணியளவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாளாக 27.09.2017 அன்று 10.30மணியளவில் என முதல் தகவல் அறிக்கை/அ.சா.ஆ4-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது." முதல் தகவல் அறிக்கையில் பத்தி 8-ல் குற்ற முறையீட்டளரால்/ தகவல் கொடுப்பதில் முறையிட்டதில் தாமதம் என்ற இடத்தில் எதுவும் குறிப்பிடவில்லை.

iii) புகார்தாரர் தனது முதன்மை சாட்சியத்தில் "தான் எப்போது புகார் அளித்தேன்" என்பது குறித்து குறிப்பாக சாட்சியம் அளிக்கவில்லை. அவர் தனது குறுக்கு விசாரணையின்போது "நான் மருத்துவமனைக்கு 9.00மணிக்கு சேர்ந்தேன். போலீசார் என்னை மறுநாள் வந்து விசாரித்தார்கள். போலீசாரிடம் நான் புகார்வாக்குமூலம் அளித்தேன்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

iv) உதவி ஆய்வாளர்/ அ.சா.8 தனது சாட்சியத்தில் "எனக்கும் சம்பவம் பற்றி

27.9.17-ம் தேதி காலை 10.30 மணிக்கு தகவல் கிடைத்தது. ஆனால் சம்பவம் நடந்தது 23.9.17-ம் தேதி இரவு 8.30 மணி என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை 27.9.17-ம் தேதி அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கையில் காலதாமதத்திற்கான காரணம் குறிப்பிட்டுள்ளேனா என்றால் அவ்வாறு குறிப்பிடவில்லை" என சாட்சியம் அளித்துள்ளார்.

v) ஆக, இவ்வழக்கு குற்ற நிகழ்வானது 23.09.2017 அன்று நடைபெற்று இருப்பினும் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கையானது 27.09.2017 அன்று தெரிவிக்கப்பட்டு அன்றையதினமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. காலதாமதத்திற்கு புகார்தாரரோ, அல்லது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளரோ எந்த ஒரு தக்கதொரு காரணங்களும் கூறவில்லை. இந்நிலையில், புகார் குறித்தும், முதல் தகவல் அறிக்கை குறித்தும் மிகுந்த சந்தேகம் எழுவே செய்கிறது. அவை யாவும் அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் விசயமாக அமைந்திருப்பதோடு மட்டுமின்றி அரசு தரப்பு வழக்கு உண்மையில்லை என்பதையும் உறுதி செய்யும் வகையிலே அமையப்பெற்றுள்ளது.

**<u>இ) இதச பிரிவு 294(b), 323 -ன் படியான குற்றச்சாட்டு</u>:-**

i) இதச பிரிவு 294(b),323-ன் படியான எதிரிகளின் மீதான குற்றச்செய்கைகள் அரசு தரப்பில் நீருபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பது குறித்து முடிவு காண்பதற்கு அச்சட்ட பிரிவுகளை இங்கே விளக்குவது அவசியமாகிறது.

ii) **<u>இ.த.ச. பிரிவு 294(b)</u>**: மற்றவர்களுக்குச் தொந்தரவாக இருக்கும்படி
(அ) ஒரு பொதுவிடத்தில் ஆபாசச் செயல் எதையும் செய்கிற, அல்லது
(ஆ) ஒரு பொதுவிடத்தில் அல்லது அதற்கு அருகில் ஆபாசப் பாடல்கள், கதைப்பாடல் அல்லது சொற்கள் எதையும் பாடுகிற, ஒப்பிக்கிற, அல்லது மொழிகிற எவராயினும், மூன்று மாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றோ, அல்லது அபராதமோ, அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

iii) **<u>இ.த.ச. பிரிவு 323</u>**: பிரிவு 334 ஆவது பிரிவில் வகை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் தவிர, தன்னிச்சையாகக் காயம் விளைவிக்கும் எவரோருவரும் ஓர் .ஆண்டு வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றோ அல்லது ஆயிரம் ரூபாய் வரை அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

iv) புகார்தாரர் தனது புகார் வாக்குமூலத்தில் "23.09.2017 இரவு 8.30மணியளவில்

தெருவிலுள்ள ஊர் பொதுபைப்புக்கு சென்று தண்ணீர் பிடித்துக்கொண்டு இருக்கும்போது அதே தெருவில் இருக்கும் வசிக்கும் மணிமேகலை (1ம் எதிரி), அவரது கணவர் அழகர்சாமி (2ம் எதிரி) ஆகிய இருவரும் தன்னுடைய கையை பிடித்து தெருவில் இழுத்துபோட்டு இங்கு எங்கே நீ தண்ணீர் பிடிக்கிறாய், நீ தண்ணீர் பிடிக்கக்கூடாது என்று என்னை கல்லாலும், கையாலும் அடித்தனர். 3ம் எதிரி பழனிச்சாமி குச்சியால் அடித்தும், இதனால் என் முதுகு பகுதியிலும், இடுப்பிலும் அதிக வலியாக உள்ளது. என்னுடைய வலது முழங்கையில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டும், இடது கை சுண்டுவிரலில் கட்டையால் அடித்ததில் உள் வலியாகவும் உள்ளது. வலது காலின் விரல்களின் தாங்க இயலாத வலியும் உள்ளது. இந்த சண்டை சச்சரவு தெரிந்து கிராம சேவகராக வேலை பார்க்கும் என்னுடைய கணவர் செல்வராஜ் மற்றும் எனது மகன் பிரசாந்த் குமார் வந்து என்னை மீட்டு இரு சக்கர வாகனம் மூலம் மணப்பாறை அரசினர் மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்து உள்நோயாளியாக உள்ளேன்" என புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

v) ஆக, அ.சா.1 தனது முதன்மை சாட்சியத்திலே "குற்ற நிகழ்வின்போது தனது கணவரோ, தனது மகனோ உடன் இல்லை என்று உறுதியாக கூறியுள்ளார். புகார்தாரர்/அ.சா.1 தனது முதன்மை சாட்சியத்தில் குற்ற நிகழ்வு நாள் குறித்து குறிப்பாக சொல்லவில்லை. "சுமார் 6,7 மாதங்களுக்கு முன்பு இரவு 8.30 மணியளவில் தெருவில் எதிரிகள் வீட்டருகே உள்ள பொதுபைப்பில் தண்ணீர் பிடிக்க நான் போயிருந்தபோது ஆஜர் எதிரிகள் என்னை அசிங்கமாக பேசி கட்டானில் அடித்தார்கள். எனக்கு காலிலும், கைகளிலும் காயம் ஏற்பட்டது" என்று மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார்.

vi)அவர் தனது குறுக்கு விசாரணையின்போது "இரவு 8.30 மணிக்கு நடந்தது. பொதுவாக தண்ணீர் திறந்துவிடுவது காலை 6.00 முதல் 8.00மணிக்குள்தான் என்றால் சரிதான். அன்று காலையிலேயே நான் தண்ணீர் எடுத்துவிட்டேன். எதிரிகளுக்கும் எங்களுக்கும் ஏற்கனவே முன்விரோதம் உள்ளது" என சாட்சியம் அளித்துள்ளார்.

vii) ஆக, அ.சா.1 தனது சாட்சியத்திலே எதிரிகள் தன்னை பொது இடத்தில் வைத்து மற்றவர்கள் அருவருக்க தக்க வகையில் ஆபாசமாக பேசினார்கள் என்று குறிப்பான வகையில் சாட்சியமளிக்கவில்லை. மேலும், அவர் அளித்த சாட்சியம் புகார் வாக்குமூலத்திற்கு முற்றிலும் எதிரிடையாகவே அமையப்பெற்றுள்ளது.

viii) அ.சா1-ன் கணவர் அ.சா.2 தனது முதன்மை சாட்சியத்திலே "நான் வேலை முடித்துவரும்போது சத்தம் கேட்டு போய் பார்த்து என் மனைவியை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்" என்று மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். அவர் குற்ற நிகழ்விடத்தை நேரில்

கண்ணுற்றதாக சாட்சியம் அளிக்கவில்லை. அவருடைய அத்தகைய சாட்சியம் அரசு தரப்பிற்கு வலு சேர்க்கும் வகையில் அமையப்பெறவில்லை. மேலும், எதிரிகள் குற்ற நிகழ்வில் ஈடுபட்டார்கள் என்பதை உறுதி செய்யும் வகையில் அமைந்திருக்கவில்லை.

xi) குற்ற நிகழ்வினை கண்ணுற்றதாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.3, அ.சா.4 மற்றும் அ.சா.6 ஆகிய மூவருமே "இவ்வழக்கு குற்ற நிகழ்வு குறித்து தங்களுக்கு தெரியாது என்றும், தாங்கள் நேரில் பார்க்கவில்லையென்றும், போலீசார் தங்களை விசாரிக்கும்போது இதே தான் சொன்னோம்" என்று சாட்சியம் அளித்து அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறு, கண்ணுற்ற சாட்சியான அ.சா.3,அ.சா.4 மற்றும் அ.சா.6 ஆகிய மூவரும் அ.சா.1 அளித்த சாட்சியத்திற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையிலும், அ.சா.2-ன் சாட்சியமும், அசா.1-ன் சாட்சியத்திற்கு உறுதுணையாக அமையப்பெறாத நிலையிலும், அ.சா.1-ன் சாட்சியம் எவ்வகையிலும், எதிரியின் மீதான குற்றச் செய்கைகளை நீருபணம் செய்யும் வகையில் அமையப்பெறவில்லையென்றே நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இத்தகைய அ.சா1-ன் சாட்சியம் எதிரியின் மீதான குற்றச் செய்கைகளை நீருபணம் செய்ய போதுமானதாக அமைந்திருக்கவில்லையென்றும் நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

x) குற்ற நிகழ்விடம் குறித்து நீருபணம் செய்வதற்கு விசாரணை செய்யப்பட்ட பார்வை மகசர் சாட்சி/அ.சா.5 தனது சாட்சியத்தில் "நான் எழுதாத ஒரு வெள்ளைதாளில்தான் கையெழுத்து செய்தேன். அதுவும் மணிமேகலையை தாக்கிய வழக்கில் கையெழுத்து செய்து கொடுத்தேன். வேறு எந்த வழக்குகளுக்கும் நான் கையெழுத்து போடவில்லை. சம்பவம் குறித்து தெரியாது. அந்த சமயம் நான் வீட்டில் இல்லையென்றும்" குறிப்பாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அவருடைய அத்தகைய சாட்சியமும் அரசு தரப்பிற்கு எந்த விதத்திலும் உதவிடும் வகையில் அமையப்பெறவில்லை மற்றும் குற்ற நிகழ்விடத்தை அறியப்பெறும் வகையிலும் அமைந்திருக்கவில்லை.

xi) அ.சா.1 தனது சாட்சியத்தில் தான் இரவு 9 மணியளவில் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்று கூறியுள்ளார். ஆனால் அதே வேளையில் அவருக்கு சிகிச்சையளித்த அரசு மருத்துவர்/அ.சா.7 தனது சாட்சியத்தில் "23.9.17-ம்தேதி பணியிலிருந்தபோது இரவு 10.35 மணிக்கு பிச்சையம்மாள் என்பவரை அவரது கணவர் செல்வராஜ் அழைத்து வந்தார். பிச்சையம்மாள் அன்று இரவு 8.00மணிக்கு தன்னை அடையாளம் தெரிந்த இருவர் கட்டை, கல் கொண்டு அடித்துவிட்டதாக கூறினார்" என்று சாட்சியம்

அளித்துள்ளார். மேலும், அவர் தனது சாட்சியத்தில் "ஒருவர் சொரசொரப்பான தரையில் வழுக்கிவிழும்போது அவ்வாறு காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். வலி இருப்பதாக சொல்வது கற்பனையாககூட சொல்லாலம் என்றால் ஆமாம். 2 நபர்கள் அடித்ததாக என்னிடம் கூறினார" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

xii) ஆனால் அதே வேளையில் புகார்தாரர் தன்னை எதிரிகள் 3 பேர் சேர்ந்து தாக்கினர் என புகார் வாக்குமூலத்திலும், முதன்மை சாட்சியத்திலும் கூறியுள்ளார். அத்தகைய முரண்பாடு ஏன் என்பது குறித்து அரசு தரப்பில் எந்த வித விளக்கமும் அளிக்கப்படவில்லை. அதுவும் அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் விஜயமாகவே அமையப்பெற்றுள்ளது.

xiii) புகார்தாரர்/அ.சா.1 அவர்களும், விசாரணை அதிகாரிகள்/அ.சா.8 மற்றும் அ.சா.9 ஆகிய இருவரும் இவ்வழக்கு குற்ற நிகழ்வு நாளில் குற்ற நிகழ்வு நேரத்தில் எதிரி மணிமேகலையை அ.சா.2 போதையில் தாக்கி பாலியல் தொல்லை கொடுத்ததாக 1-ம் எதிரி மணிமேகலை தரப்பினருக்கும், அ.சா.1 தரப்பினருக்கும் எதிராக அதே காவல் நிலையத்தில் புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கையானது குற்ற எண் 137/17-ன் படி பதிவு செய்யப்பட்டு சி.சி. எண்.37/18 நிலுவையில் உள்ளது என்பது குறித்து குறிப்பான வகையில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி இரு குற்ற வழக்குகளையும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அவரே தான் புலன் விசாரணை மேற்கொண்டார் என்பதும் முழுமையாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு ஒரே குற்ற நிகழ்வில் இரு வேறு தரப்பினர்களும் ஒருவருக்கொருவர் எதிராக புகார் அளிக்கும்போது அது குறித்து எவ்வாறு புலன் விசாரணை மேற்கொள்ளவேண்டுமென்று காவல் நிலைய ஆணை எண் 588-A பின்வருமாறு விளக்குகிறது.

**<u>Clause 588-A, Charge sheets in cause and counter cases</u>**

In a complaint and counter complaint obviously arising out of the same transaction the investigating officer stood enquire in to both of them and adopt one or other two courses viz., to charge the case were the accused were the aggressors or to refer both cases if he should not find them and true. When the investigation proceeds on the basis of the complaint it is his duty to exhibit the counter complaint in the court and also to prove medical of persons wounded on the opposite side. He

should place before the court a definite case which he asks it to accept. The investigating officer in such cases should not accept in toto one complaint and examined only witnesses who support it and give no explanation at all for the injuries caused to the other side. The truth in these cases is invariably not in strict conformity with either complaint and it is quite necessary that all the facts are placed before this court to enable it to arrival at the truth and a just decision. If investigation officer finds that the choice of either course is difficult, viz., to charge one of the two cases or throw out both, he seek the opinion of the Public prosecutor of the district and act accordingly. A final report should be send in despite of the case referred as mistake of fact and the complaint or counter complaint as the case may be, should be advised about the disposal by a notice in form No.96 and to seek remedy before the specified Magistrate, if he is aggrieved by the disposal of the case by the police.

xiv) அதன்படி பார்க்கும்போது ஒரே குற்றநிகழ்வின்படி இருவேறு தரப்பினர்கள் அளித்த புகாரின் அடிப்படையில் இருவேறு முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டால் அதனை ஒரே விசாரணை அதிகாரிதான் விசாரித்து குற்ற நிகழ்வுக்கு உண்மையான காரணதாரர்கள் யார் என கண்டறிந்து அவர்களுக்கெதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்து மற்ற தரப்பினர்களுக்கெதிரான முதல் தகவல் அறிக்கையை கைவிடப்படவேண்டும் என அறிக்கை தாக்கல் செய்யவேண்டும் என்றும், அவ்வாறு விசாரணை அதிகாரியால் குற்ற நிகழ்வுக்கு உண்மையான காரணதாரர்கள் யார் என்று கண்டறிவது கடினம் என்று கருதினால் இருதரப்பினருக்கெதிராகவும் விசாரணையின் அடிப்படையில் இறுதி அறிக்கை தயார் செய்து அரசு குற்றவியல் வழக்கறிஞரிடம் கருத்துரை பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் என்று விளக்குகிறது. மேற்கண்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டவிட்டால் அது அரசுதரப்பிற்கு பாதகமாகிவிடும் என்பதும் விளங்குகிறது.

xv) அது குறித்த சட்டதீர்ப்புகளை சுட்டிக்காட்டுவது அவசியமாகிறது.

**a) In Crl. Appeal No.31 of 2001 and C.A.No.60 of 2001, Vadivel and others Vs. State represent by Inspector of Police, Puthanatham Police Station in Cr.No.72 of 1999, dated: 25.01.2008** held that, ‘’ 12. In justin Vs. The state rep

by the Inspector of Police, 1988 L.W. (Cri) 467, this court held as follows 4. In cases of complaints and counter complaints, the Procedure followed by the Investigating Officer is laid down under OR.588-A of the Madras Police standing orders. The Investigating Officers has to inquire into the both complaints, find out who where they aggressors and file the charge sheet against from or rever both cases if he finds them untrue. Where the Investigating Officer finds it difficult to choose either of the above courses he should seek the opinion of the public prosecutor and act accordingly. The Investigating officer in this case has evidently contravened the express provision of 588-A of the Madras Police standing order in charge sheeting both cases. The result is that there are now two prosecutions in respect of the same matter against opposite parties the course adopted by the investigating officer is not only proper but also bad in law. In view of this matter, criminal proceeding below against the petitioner hearing or likely to be caused .....14. As per the provisions of standing order 588A of Madras Police standing order the case filed by the appellants also ought to have been investigate and a final report ought to have been filed either charging the accused or referring it as a mistake of fact. But the Investigating officer has not done so. As provided in standing order 588 A, a compliant and counter compliant obviously arising out of the same transaction the Investigating Officers has to inquire into the both complaints, find out who where they aggressors and file the charge sheet against from or against both cases if he finds them untrue. When the Investigating Officer proceeds on the basis of compliant it is the duty to exhibit the counter compliant in the court and also to prove medical certificate of persons wounded on the opposite side. He should place before the court a definite case which he asks it to accept. Investigating officer in such cases should not accept in toto one compliant and examined only witness who support it and give no explanation at all for the injuries caused to the other side. That true into the case invariably not in strict conformity with either compliant and it is quite necessary that all the facts are placed

before the court to enable it to arrive at the truth and a just decision if the investigating officer finds it difficult to choose either of the above courses he should seek the opinion of the public prosecutor and act accordingly. But in the instant case, the investigating officer has not obtained any opinion from the public prosecutor as to the filing of charge sheet in both cases. The investigating officer might felt that both the parties have been in aggressive mood, and was not in a position to determine who was the aggressive party and having satisfied that the sequence of events is so clear and offence have been committed by each of the party could have filed positive report against both parties. Even then, in view of the special features of the case as enumerated herein, this court is of the firm view that it is not safe to fasten criminal liability up on the accused in both cases as had been then by the court below".

b) In **Ravichandran and others Vs. State Represent by Inspector of police Jeeyapuram P.S, Trichy District, in Crl.A.No.233 of 2007dated 04.06.2015 wherein** held that '' It is always necessary for the prosecution to place all the materials collected during the investigation of the counter case also. Since in this case, the materials collected during the investigation of the counter case have been suppressed, it goes without saying that the prosecution has not come forward with clean hands. as per section 114 of Indian Evidence Act, it is to be presumed that these materials collected would have gone in favour of the accused and that is the reason why have been suppressed. For all these reasons, I have to concur with the arguments advanced by the leaned counsel for the appellant that the version projected by the prosecution cannot be taken as a gospel truth. Therefore I have to give benefit of doubt arising out of the same to the accused''.

xvi) இந்த வழக்கினை விசாரித்த விசாரணை அதிகாரியானவர் தனது இறுதி அறிக்கைகயில் எதிரிகள் தரப்பினர் அளித்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையினை பற்றியோ, அதனடிப்படையில் தான் மேற்கொண்ட விசாரணை

குறித்தோ எந்தவித விபரங்களையும் கூறவில்லை. மேலும் எதிரிக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்த விபரங்களையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையில் குறிப்பிடவில்லை. எதிரி தரப்பில் அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வழக்கின் நிலை குறித்தும் தமது சாட்சியத்திலும் கூட தெளிவான முறையில் புலன்விசாரணை அதிகாரி எடுத்துரைக்கவில்லை.

xvii) ஒரே சம்பவ நிகழ்வு குறித்து அளிக்கப்பட்ட இருவேறு புகார்களையும் விசாரித்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரியானவர் மேலே விவரித்தவாறு தமிழ்நாடு காவல்துறை நிலை ஆணை 588(எ)ல் சொல்லப்பட்ட எந்த ஒரு நடைமுறைகளையும் பின்பற்றவில்லை என்பது தெள்ளத்தெரிளவாக அறியமுடிகிறது. அதாவது இவ்வழக்கு குற்ற நிகழ்வில் சம்மந்தப்பட்ட இரு தரப்பினர்களில் யார் சம்பவ நிகழ்விற்கு காரணமானவர்கள் என்றோ அல்லது சம்பவ நிகழ்வில் அதித குற்றம் செயலில் ஈடுபட்டவர்கள் எந்த தரப்பினர் என்றோ தனது இறுதி அறிக்கயில் குறிப்பிடவில்லை. அவ்வாறு முடிவுக்கு வராமலும், அது குறித்து குற்றவியல் அரசு வழக்கறிஞரிடம் கருத்துரை பெறாமலும் எதிரிகள் மீது சட்ட முறைகளை பின்பற்றாமல் தாக்கல் செய்த இறுதி அறிக்கையானது எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்கண்டவைகள் யாவும் அரசுத்தரப்பு வழக்கை முழுமையாக பாதிக்கும் விசயமாக அமையப்பெற்றுள்ளன என்பதோடு மட்டுமன்றி அரசுத்தரப்பு முழுமையாக சரியான காரணங்கள் கூறி உண்மையான இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றே இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 114-ன் கீழ் அனுமானம் செய்யும் விதத்தில் அமையப் பெற்றுள்ளது. அவை யாவும் அரசு தரப்பு வழக்கை முழுமையாக பாதிக்கும் விஜயமாகவேஅமையப்பெற்றுள்ளது.

xviii) மேலும், இவ்வழக்கில் எதிரிகள் பின்பற்றியதாக சொன்ன கல் மற்றும் கட்டை ஆகிய எந்த ஒரு ஆயுதங்களையும் இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியால் இவ்வழக்கு குற்ற நிகழ்விடத்திலிருந்தோ, அல்லது வேறு இடத்திலிருந்தோ உரிய சாட்சிகளின் வாயிலாக மகசர் வழி கைப்பற்றி நீதிமன்றம் முன்பு ஆஜர்படுத்தப்படவில்லை. அவ்வாறு, ஆஜர்படுத்தப்படாததற்கு தகுந்த மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் யாவும் இவ்வழக்கு புலன் விசாரணை அதிகாரியால் கூறப்படவில்லை. அவை யாவும் அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் விஜயமாக அமைவதோடு மட்டுமின்றி அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகம் ஏற்படவே செய்கிறது.

xix) இவ்வாறு அ.சா.1 அவர்களே தான் அளித்த புகார் வாக்குமூலத்திற்கு முற்றிலும் முரணாகவே சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், அவருடைய அத்தகைய சாட்சியத்திற்கும் ஆதரவாக அவருடைய கணவர்/அ.சா2 அவர்களும், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.3, அ.சா.4 மற்றும் அ.சா.6 ஆகிய எவருமே ஒத்து ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையிலும் பார்வை மகசர் சாட்சியும், குற்ற நிகழ்விடம் இரு என்று அறியப்பெறும வகையில் சாட்சியம் அளிக்காத நிலையிலும் அரசு மருத்துவர் சாட்சியமும் அரசு தரப்பிற்கு உதவிடும் வகையில் அமையப்பெறாத நிலையிலும், இவ்வழக்கு அரசு தரப்பானது எதிரிகளின் மீதான எந்த ஒரு குற்றச்சாட்டும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நீரூபணம் செய்யப்படவில்லையென்றே நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இந்நிலையில் சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்வது ஒன்றே உகந்தது என்றே நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அவ்வாறே வழக்கு பிரச்சினைக்கு முடிவு காணப்படுகிறது.

**முடிவாக, அரசு தரப்பில் எதிரிகளின் இதச பிரிவுகள் 294(பி), 323-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றச் செய்கைகள் புரிந்தாகள் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நீரூபணம் செய்ய தவறிவிட்ட நிலையில் எதிரிகளை குற்றவாளி இல்லையென முடிவு செய்து கு.வி.மு.ச 255(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

எதிரி எழுதிக் கொடுத்த பிணையம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. வழக்கு சான்று பொருள் ஏதுமில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, 2020-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 10-ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
மணப்பாறை.

**இணைப்பு:**

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி. பிச்சையம்மாள் |
| அ.சா.2 | திரு. செல்வராஜ் |
| அ.சா.3 | திருமதி. மீனா |
| அ.சா.4 | திரு. முத்தையா |
| அ.சா.5. | திருமதி. மல்லிகா |

| | |
|---|---|
| அ.சா.6 | திரு.நடராஜன் |
| அ.சா.7 | திருமதி. டயானா (மருத்துவர்) |
| அ.சா.8 | திரு. ரமேஷ்பாபு ( உதவி ஆய்வாளர்) |
| அ.சா.9 | திரு. ஜெயக்குமார் (உதவி ஆய்வாளர்) |

**<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:-</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 27.09.2017 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | - | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.3 | 23.09.2017 | விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.4 | 27.09.2017 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | - | மாதிரி வரைபடம் |

**<u>அரசு தரப்பு சான்று பொருள்</u>:** இல்லை

**<u>எதிரிகள் தரப்பில் சாட்சிகள்</u>:** இல்லை

**<u>எதிரிகள் தரப்பில் சான்றாவணம்</u>:** இல்லை

நீதித்துறை நடுவர்,
மணப்பாறை.